කාර්ය සාධන වාර්තාව

செயலாற்றுகை அறிக்கை

Performance Report

2012

භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

Department of Treasury Operations

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
කොළඹ 01

நிதி திட்டமிடல் அமைச்சு
கொழும்பு 01

Ministry of Finance & Planning
Colombo 01.

பொருளடக்கம்

இலக்கம்		பக்க
1.	நோக்கு	02
2.	செயற்பணி	02
3.	அறிமுகம்	02
4.	பிரதான தொழிற்பாடுகள்	02
5.	பதவியணி பற்றிய தகவல் மற்றும் அமைப்புரீதியான கட்டமைப்பு	03
6.	மனித வள அபிவிருத்தி	05
7.	நிதிச் செயலாற்றுகை	06
8.	பௌதீகச் செயலாற்றுகை	08
8.1	நிதி முகாமைத்துவம்	08
8.2	அரசாங்கக் கடன் முகாமைத்துவம்	17
8.3	அரசாங்க இறைவரி	22
8.4	வெளி நாட்டு உதவி முகாமைத்துவம்	23
8.5	திறைசேரியின் தனிக் கணக்குகள் முறை மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு முறை தொடர்பான முன்னேற்றம்	28

1. நோக்கு

"அரச நிதி முகாமைத்துவம் தெற்காசிய வலயயத்தின் சிறந்த நிறுவனமாக மாறுதல்."

2. செயற்பணி

"நிதி கணக்கீடு மற்றும் அரச கணக்கீடு பற்றிய பொறுப்பினை வகித்து, அரச செலவின நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக திரண்ட நிதியம் மற்றும் ஏனைய திறைசேரி நிதியங்கள் என்பவற்றினை வினைத்திறனாகவும். சிக்கனமாகவும் பயன்படுத்துதல், வருமானத்தைத் திரட்டுதல் மற்றும் அரச கடன் பெறுகைகள் தொடர்பான ஒருங்கிணைப்பாளர் ஒருவராகச் செயற்படுவதற்கு அர்ப்பணித்தல்."

3. அறிமுகம்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது (TOD), திரட்டிய நிதி (திறைசேரி பண ஓட்டம்) மற்றும் அரசாங்கக் கடன்களின் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களைக் கையாளுவதற்கு திறைசேரிக்குள் திறமைமிக்க அமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் 2004 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டது. இந்த முயற்சியில், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை வருடாந்த, மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் செயற்பாட்டு ரீதியான பண உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல், முகாமைத்துவத் திட்டமாக மாற்றி, அரசாங்கத்தின் வரவு செலவு இலக்குகளை அடைந்து கொள்வதில் தேசிய வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு அவற்றை பயன்மிக்கதாகவும் திறமைமிக்கதாகவும் முகாமைத்துவப்படுத்துதல்.

4. பிரதான தொழிற்பாடுகள்

- திறைசேரி பண ஓட்ட முகாமைத்துவம்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பெறுதல்களை ஒழுங்கு செய்வதில் உதவியளித்தல்.
- கொடுப்பனவு முறையினூடாக திறைசேரி நிதியங்களைப் பிரித்துக் கொடுத்தல்.
- செலவிடும் முகவர்களுக்கான நிதியங்களை மதிப்பீடு செய்தல், முன்னுரிமையளித்தல் மற்றும் விடுவித்தல்.
- திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்
- அரசாங்கத்தின் கடன் கொடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் தெரடர்பான நிதி ஓட்டங்களின் தொழிற்பாடு
- 11 தலைப்புகளின் கீழ் வரியல்லாத வருமானம் மற்றும் 01 தலைப்பின் கீழ் வரி வருமானம் என்பவற்றை மதிப்பீடு செய்தல், சேகரித்தல் மற்றும் கணக்கீடு செய்தல்.
- வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் மாணியங்களின் கீழ் நிதியங்களைப் பிரித்துக் கொடுப்பதற்காக வசதியளித்தல்
- அரசாங்க கடன்பெறுதல்கள் மற்றும் கடன் மீள் கொடுப்பனவுகளை கணக்கீடு செய்தல்.
- அரசாங்க வங்கிக் கணக்குகளுக்கும் முற்பணக் கணக்குகளுக்கும் அதிகாரமளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- வெளிநாட்டு உதவிச் செயற் திட்டங்களைக் கணக்கீடு செய்வதில் வழிகாட்டுதல், மேற்பார்வை செய்தல் மற்றும் வசதியளித்தல்.

5. பதவியணித் தகவல் மற்றும் அமைப்புமுறைக் கட்டமைப்பு

அட்டவணை 5 (அ) 2012.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு பதவியணித் தகவல்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்பொழுது இருக்கும் பதவியணி (2012.12.31)
பணிப்பாளர் நாயகம்	1	1
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்	2	1
இலங்கை நிருவாகச் சேவை - வகுப்பு III	1	1
இலங்கை கணக்காளர் சேவை - வகுப்பு I	5	4
இலங்கை கணக்காளர் சேவை - வகுப்பு II / III	11	9
நிருவாக உத்தியோகத்தர்	1	1
கணக்குகள் பகுப்பாய்வாளர்	14	2
அபிவிருத்தி உதவியாளர்	1	0
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	1	0
கணக்குகள் உதவியாளர்	2	0
அரச முகாமைத்துவ உதவியாளர் (வகுப்பு I)	5	6
அரச முகாமைத்துவ உதவியாளர் (வகுப்பு II / III)	54	47
தரவுப் பதிவு இயக்குநர்கள்	7	5
சாரதி	6	6
அலுவலகப் பணியாளர் சேவை 1	1	3
அலுவலகப் பணியாளர் சேவை 11/111	11	9
மொத்தம்	123	95

அமைப்புமுறைக் கட்டமைப்பு

அட்டவணை 5 (அ)



6. *மனித வள அபிவிருத்தி*

திணைக்களத்தின் பணியாளர்களின் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மும்மொழி ஆற்றல் தொடர்பான அறிவுகளை மேம்படுத்தும் நோக்கில், மிலோதா, இலங்கை மன்றக் கல்லூரி மற்றும் இந்தத் திணைக்களத்திலுள்ள பிரீமியம் என்பவற்றினால் நடாத்தப்பட்ட பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவை என்பவற்றின் 18 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

1. அலுவலக முகாமைத்துவம்
2. அங்கிலத்தில் தொடர்பாடல் திறன்களில் டிப்ளோமா
3. தமிழ் மொழி
4. MS Excel ஐப் பயன்படுத்தி விரிதாளைக் கையாளுதல்

மேலே குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக திணைக்களத்தின் முழுமையான பணியாளர்களுக்கும் ஆற்றல் மற்றும் சுய விருத்தி தொடர்பான வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று கன்னொருவயிலுள்ள விவசாயத் திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தில் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ஆம் 07 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டன. அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 44 பதவி உறுப்பினர்கள் பங்குபற்றினர்

மேலும், இந்த வருடக் காலப் பகுதியில் 6 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டன.

7. 2012 ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றுகை

அட்டவணை 7.(அ) 2012 ஆம் ஆண்டிலுள்ள மீண்டுவரும் நிதிச் செயலாற்றுகை பின்வருமாறு

விடயம்	வகுதி / நோக்கம் / விடயம் / விபரம்	2011		2012		2011 இன் செலவினம் மீதான அதிகரிப்பு / குறைவு	2011 இன் உண்மைச் செலவினத்தின் அடிப்படையிலான அதிகரிப்பு / குறைவு
		மதிப்பீடு	உண்மை	மதிப்பீடு	உண்மை		
மீண்டெழும் செலவினம்		845,833	845,556	998,010	725,380	(120,176)	(14.21)
	ஆளுக்குரிய வேதனாதிகள்	**37,050**	**36,791**	**37,639**	**37,583**	**792**	**2.15**
1001	சம்பளங்கள் மற்றும் கூழிகள்	29,200	28,982	29,400	29,365	**383**	**1.32**
1002	மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள்	500	500	600	597	**97**	**19.40**
1003	ஏனைய கொடுப்பனவுகள்	7,350	7,309	7,639	7,621	**312**	**4.27**
	பயணச் செலவுகள்	**1,439**	**1,434**	**2,013**	**2,012**	**578**	**40.31**
1101	உள்நாட்டு	29	28	67	66	**38**	**135.71**
1102	வெளிநாட்டு	1,410	1,406	1,946	1,946	**540**	**38.41**
	வழங்கல்கள்	**3,130**	**3,128**	**3,720**	**3,679**	**551**	**17.62**
1201	காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	1,440	1,439	1,860	1,852	**413**	**28.70**
1202	எரிபொருள்	1,645	1,644	1,800	1,767	**123**	**7.48**
1203	உணவுகள் மற்றும் சீருடைகள்	45	45	60	60	**15**	**33.33**
	பராமரிப்புச் செலவினம்	**952**	**944**	**1,368**	**1,363**	**419**	**44.39**
1301	வாகனங்கள்	630	625	725	722	**97**	**15.52**
1302	பொறித் தொகுதி, இயந்திர சாதனம் மற்றும் உபகரணம்	300	297	593	593	**296**	**99.66**
1303	கட்டடம் மற்றும் கட்டமைப்பு	22	22	50	48	**26**	**118.18**
	சேவைகள்	**2,225**	**2,222**	**2,421**	**2,328**	**106**	**4.77**
1401	போக்குவரத்து	769	768	860	860	**92**	**11.98**
1402	தபால் மற்றும் தொடர்பாடல்	1,435	1,433	1,501	1,408	**(25)**	**(1.74)**
1405	ஏனையவை	21	21	60	60	**39**	**185.71**
	மாற்றல்கள்	**801,037**	**801,037**	**950,849**	**678,415**	**(122,622)**	**(15.31)**
1503-01	லொத்தர் வருமானத்தை மீளச் செலுத்துதல்	306,145	306,145	450,000	402,567	**96,422**	**31.50**
1505-01	அரசாங்க ஊழியர்களின் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு	494,229	494,229	500,000	275,000	**(219,229)**	**(44.36)**
1506	அரசாங்க ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி	663	663	849	848	**185**	**27.90**

அட்டவணை 7.(அ) 2012 ஆம் ஆண்டிலுள்ள மூலதன நிதிச் செயலாற்றுகை பின்வருமாறு

ரூபா. '000

விடயம்	வகுதி / நோக்கம் / விடயம் / விபரம்	2012		2011		2011 இன் செலவினம் மீதான அதிகரிப்பு / குறைவு	2011 இன் உண்மைச் செலவினத்தின் அடிப்படையிலான அதிகரிப்பு / குறைவு
		மதிப்பீடு	உண்மையான	மதிப்பீடு	உண்மையான		
மூலதனச் செலவினம்		1,004,950	1,004,400	755,300	754,032	(250,368)	(24.93)
	மூலதனச் சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துகை	**3,800**	**3,284**	**3,700**	**3,198**	**(86)**	**(2.62)**
2001	**கட்டடங்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்துகை**	100	64	100	100	**36**	**56.25**
2002-01	திறைசேரியின் தனிக் கணக்குகள் முறையின் செயற்படுத்தகை	3,300	2,823	3,000	2,512	**(311)**	**(11.02)**
2003	வாகனங்கள்	400	397	600	586	**189**	**47.61**
	மூலதனச் சொத்துக்களைச் சுவீகரித்தல்	**150**	**132**	**600**	**571**	**439**	**332.58**
2102	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	100	94	600	571	**477**	**507.45**
2103	பொறித் தொகுதி, இயந்திர சாதனம் மற்றும் உபகரணங்கள்	50	38	0	0	**(38)**	**(100.00)**
	நிதிச் சொத்துக்களைச் சுவீகரித்தல்	**1,000,000**	**1,000,000**	**750,000**	**750,000**	**(250,000)**	**(25.00)**
2302-05	விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதில் பயன்படுத்தப்பட இருக்கும் சுழற்சி நிதி	1,000,000	1,000,000	750,000	750,000	**(250,000)**	**(25.00)**
	மனித வள அபிவிருத்தி	**1,000**	**984**	**1,000**	**263**	**(721)**	**(73.27)**
2401	அறிவை அதிகரித்தல் மற்றும் நிறுவன அபிவிருத்தி	1,000	984	1,000	263	**(721)**	**(73.27)**

8. *பௌதீகச் செயலாற்றுகை*

8.1 நிதி முகாமைத்துவம்

8.1.1 திறைசேரியின் பண ஓட்ட முகாமைத்துவம்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது (TOD), அரசாங்க நிதியைப் பயன்மிக்கதாகப் முகாமைத்துவம் செய்வதற்கும் வரவு செலவுத் திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் கொள்கை இலக்குகளை அடைந்து கொள்வதில், கடன் பெறும் செலவுகளைக் குறைப்பதற்கும் 2012 ஆம் ஆண்டில் பயன்மிக்க நிதித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ உபாயத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்புக்களில் ஒன்று, காலத்திற்கு ஏற்ற விதத்திலும் முன்னரிமை அடிப்படையிலும் செலவிடும் நிறுவனங்களுக்கு (அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்) பணத்தை விடுவிப்பதாகும். பணத்திற்கான கேள்வியானது, எப்போதும் கிடைக்கப் பெறும் நிதியிலும் பார்க்கக் கூடுதலாக இருந்ததென்பது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அனுபவமாகும். எனவே வரவு செலவுத் திட்டத்தின் மிதமான செயற்படுத்துகைக்கு அவசியமான நிதியங்களை விடுவிக்கும் பொருட்டு செலவிடும் நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் பணத்திற்கான கேள்வியின் தேவைகளை மதிப்பீடு செய்வது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

2012 ஆம் ஆண்டில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் ஏற்கப்பட்ட பண ஓட்ட முகாமைத்துவ உபாயமானது, அரசாங்கக் கடன் திணைக்களத்தின் மீள் நிதியளிப்பு அபாயத்தைக் குறைப்பதனால், கடன் கடப்பாடுகளின் நெருங்கிய திகதிகள் தொடர்பான அழுத்தத்தை இலகுபடுத்துவதற்கும், உள்நாட்டு வட்டி வீதங்கள் தொடர்பான அழுத்தத்தைக் இலகுபடுத்துவதற்கும் பங்களிப்புச் செய்துள்ளது. இந்த உபாயத்தின் கீழ், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் விரிவுபடுத்தப்பட்ட உடன்படிக்கைப் பண உட்பாய்ச்சல்கள், பணத்தின் வெளிப் பாய்ச்சல்கள் மீதான வரையறைகள் மற்றும் அநேகமாக கடன் பெறுதலின் காலத்தைக் குறிப்பிடுதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிற்பாட்டு ரீதியான மாதாந்த பண முகாமைத்துவத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த மாதாந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்ட பண உட்பாய்ச்சல்கள், பணத்தின் வெளிப் பாய்ச்சல்கள் மற்றும் திட்டமிடப்பட்ட கடன் பெறுதல்கள் போன்றவற்றை அமைத்து பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக வருடாந்த பணத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும்.

மாதாந்த மற்றும் வருடாந்த பணத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றினால் சமர்ப்பிக்கப்படும் வருமான முன்னறிவிப்புகளையும் மாதாந்த வரி மற்றும் வரி அல்லாத வருமானக் கிடைப்பனவுகளையும், செலவினங்களையும் நியதிகளின் அடிப்படையில் தாபிப்பதற்காக கடந்த கால மாதாந்த மாதிரிகளையும் பயன்படுத்துகின்றது. 2012 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு ரீதியான பண ஓட்டத்தினை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தியமை செலவினத்தையும் அரசாங்க வருமானத்தையும்

முகாமைத்துவப் படுத்துவதற்கு / திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு உதவியது.

பண ஓட்ட முகாமைத்துவம் தொடர்பான அவசியமான வழிகாட்டலைப் பெறுதல் மற்றும் 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைந்து கொள்ளுதல் ஆகியவற்றின் பொருட்டு இந்த வருடக் காலப் பகுதியில் வருமான இலக்குகளை மீளாய்வு செய்யும் 11 கூட்டங்கள், திறைசேரியின் செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்றன. பிரதானமாக வருமானம் உழைக்கும் திணைக்களங்களின் தலைவர்கள் அதாவது உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரும் திறைசேரியின் உத்தியோகத்தர்களும் இந்தக் கூட்டங்களில் பங்குபற்றினர்.

முன்னைய வருடங்களைப் போன்று இந்த வருடக் காலப் பகுதியில் வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவது கடன் பெறுவதினூடாக மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதில் சவால்மிக்க ஒரு வருடமாக இருந்தது. திட்டமிடப்பட்டவாறு வருமான இலக்குகள் அடையப் பெறாதிருந்த போதிலும், வட்டி மீதான செலவினம் அதிகரித்தது. இலங்கை மத்திய வங்கியின் அரசாங்கக் கடன் திணைக்களத்தின் உதவியுடன் 2012 ஆம் ஆண்டில் இருந்த அநேகமாக எல்லாச் சவால்களும் நியாயமானவை என திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் தெரிவித்தது. அந்தச் சவால்களில் பின்வருவன மிகவும் குறிப்பிடத் தக்கவையாக இருந்தன.

1. இலங்கை மத்திய வங்கியினால் அடைய இருக்கும் காலாண்டுப் பொருளாதார இலக்குகளுடன் திறைசேரியின் நிதி முகாமைத்துவம் முரண்படுவதில்லை என்பதை உறுதி செய்தல்.
2. திட்டமிடப்பட்டவாறு அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
3. தனியார்த் துறையினரின் கடன் தேவைகளுக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறு அரசாங்க முதலீடுகளுக்காக உள்நாட்டு நிதி வளங்களைப் பயன்படுத்துதல்
4. சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து குறைந்த செலவில் கடன் பெறுவதனைச் சிபாரிசு செய்தல்
5. வருடாந்த அரசாங்க முதலீட்டு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மாதாந்த உள்நாட்டு கடன் முகாமைத்துவக் குழுக் (DDMC) கூட்டங்களில் கடன் பெறும் தொகை தொடர்பான சிபாரிசுகளைச் செய்தல்.

8.1.2 திறைசேரிப் பண உட்பாய்ச்சல்

அட்டவணை *8.1 (அ) வருமானங்களைத் திரட்டுதல் - 2012*

(ரூபா. மில்லியன்)

	மதிப்பீடு	உண்மையான	% மாற்றம்
வரி வருமானம்	994,559	833,520	84
வரியல்லாத வருமானம்	73,238	124,359	170
மாணியம்	2,416	3,117	129
மொத்த வருமானம்	1,070,213	961,050	90

வரைபடம் 8.1 *(அ)* மதிப்பிடப்பட்டதும் உண்மையானதுமான வருமானம் - 2012



அட்டவணை 8.1 (அ) மற்றும் வரைபடம் 8.1 (அ) ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளவாறு, 2012 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 90% ஆகும். இந்த முன்னேற்றம் வரி வருமானத்திலிருந்து கிடைத்த 84%, வரியல்லாத வருமானத்திலிருந்து கிடைத்த 170% மற்றும் வெளிநாட்டு மாணியத்திலிருந்து கிடைத்த 131% ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

பொருளாதார நடவடிக்கையின் மந்தகதி மற்றும் இறக்குமதிகளில் காணப்பட்ட வீழ்ச்சி என்பன அரசாங்க வருமானச் சேகரிப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், பொதுத் திறைசேரியின் வருமானம் திரட்டல் தொடர்பான கண்காணிப்பின் பலப்படுத்தலுடன் 2012 ஆம் ஆண்டில் ரூபா 961,050 மில்லியன்களை திரட்டக் கூடியதாக இருந்தது. அது 2011 ஆம் ஆண்டின் வருமானச் சேகரிப்பான ரூபா 885,549 மில்லியனுடன் ஒப்பிடும் போது 8.5 % சதவீத அதிகரிப்பாகும். இந்த அதிகரிப்பானது, வரி மற்றும் வரியல்லாத வருமானம் ஆகிய இரண்டு வகுதிகளிலும் அறிவிக்கப்பட்டுள்ளன. வருமான அடிப்படையிலான வரிகள், மதுவரித் தீர்வைகள் மற்றும் ஏனைய வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் அதிகரிப்பு வரி வருமானத்திலுள்ள அதிகரிப்புக்கான பிரதான பங்களிப்புக் காரணிகளாக அமைந்தன. அதிகூடிய இலாபங்களின் கிடைப்பனவுகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளிலிருந்து கிடைக்கும் பங்கிலாபங்கள் என்பன 2012 ஆம் ஆண்டில் வரியல்லாத வருமானத்தின் அதிகரிப்பில் பெறுபேறாக அமைந்துள்ளது. அதற்கேற்ப, 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட மொத்த வருமானத்தின் 87% வரி வருமானத்திலிருந்து கிடைத்துள்ள அதேவேளையில் எஞ்சிய 13% வரியல்லாத வருமானம் மற்றும் மாணியங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

வெளிநாட்டு மாணியத்திலிருந்து கிடைத்த பண உட்பாய்ச்சல் பலதரப்பு மூலங்களிலிருந்து கிடைக்கப் பெறும் பங்கு குறைந்தமை மற்றும் ஐரோப்பிய சமூகத்திலிருந்து மாணியம் கிடைக்கப்பெறாமை ஆகியவற்றின் பெறுபேறாக ரூபா 3117 மில்லியன் வரையில் 4.6% இனால் மிகக் குறைந்த அளவில் குறைவடைந்துள்ளது.

8.1.3 திறைசேரியின் பண வெளிப்பாய்ச்சல்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது, அரசாங்கத்தின் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 2012 ஆம் ஆண்டில் பணத்தை விடுவிக்கும் போது தேவையான ஒரு மட்டத்தில் மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவினத்தைப் பேணுதல் ஆகிய அரசாங்கத்தின் முயற்சிகளுக்காக முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளது.

திணைக்களத்தின் சவால்மிக்க பணிகளில் ஒன்று, வட்டிக் கொடுப்பனவுகள் உட்பட மீண்டெழும் செலவினத்தை எதிர்க்கொள்வதற்கு வருமானத்தைத் தொடர்புபடுத்துவதாகும். வரைபடம் 8.1 (ஆ), உண்மையான திரண்ட வருமானம், திரண்ட மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் ஆகியவற்றையும் வங்கியின் மேலதிகப் பற்று மீதான அதன் தாக்கத்தையும் காட்டுகின்றது.

அட்டவணை 8.1 (அ) திறைசேரியின் பண உட்பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சல்களைத் தொடர்புபடுத்தல்



அட்டவணை 8.1 (b)

	திரண்ட வருமானம்	திரண்ட மீண்டெழும் செலவினம்	வங்கி மேலதிகப் பற்று	திரண்ட மூலதனம்
சனவரி	73,083	71,254	(92,016)	27,994
பெப்ரவரி	140,460	116,686	(105,356)	36,844
மார்ச்	223,964	166,590	(76,938)	48,968
ஏப்ரல்	300,681	221,656	(92,533)	71,647
மே	380,724	279,429	(88,289)	91,823
ஜுன்	480,181	331,366	(71,869)	101,984
ஜுலை	547,459	407,950	(44,247)	140,288
ஆகஸ்ட்	621,826	458,890	(103,431)	152,334
செப்டம்பர்	702,717	507,823	(98,103)	159,902
ஒக்டோபர்	783,650	560,476	(122,910)	177,625
நவம்பர்	864,321	611,742	(133,667)	195,313
டிசம்பர்	961,050	659,221	(144,474)	203,500

வரைபடம் 8.1 (ஆ) இல் காட்டப்பட்டுள்ளவாறு, அரசாங்கத்தின் வருமானச் சேகரிப்பு 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீண்டெழும் செலவினத்திற்கான பணத் தேவையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்த அதேவேளையில், மிகையான வருமானம் மூலதனச் செலவினத்திற்காகவும், கடன் மீள்கொடுப்பனவின் ஒரு பகுதியைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகவும் விடுவிக்கப்பட்டுள்ளது. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது, ஆளுக்குரிய வேதனாதிகள், ஓய்வூதியம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளுக்கான மீண்டெழும் செலவினத்திற்காக அதிக நிதியங்களை விடுவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது, உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற் திட்டங்களைத் துரிதப்படுத்தும் பொருட்டு மூலதனச் செலவினத்திற்காக தாமதமின்றி பணத்தை விடுவிப்பதற்கு சகல முயற்சிகளையும் மேற் கொண்டது. அதற்கேற்ப திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமானது, 2012 ஆம் ஆண்டில் அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்படுத்துகைக்காக ரூபா 203,500 மில்லியன்களை விடுவித்துள்ளது. அரசாங்க மூலதனச் செலவின நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாதை அபிவிருத்தி, போக்குவரத்து, “கமநெகும” நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின் முதலீட்டுக்காகவும் பின்தங்கிய பிரதேசங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும், துறைமுகங்கள், நீர்ப்பாசனம், விவசாயம், மின்வலு மற்றும் எரிசக்தி, கல்வி, சுகாதாரம் மற்றும் நீர் வழங்கல் ஆகியவற்றுக்காகவும் பணத்தை விடுவித்துள்ளது.

8.1.4 நிதி வரையறைகள் மற்றும் விடுவிப்புகளின் இணைவு

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் அமைப்புமுறையான வடிவமைப்புக்கு இணங்க பின்வரும் ஐந்து துறைகளை உள்ளடக்கியுள்ளது.

1. உட்கட்டமைப்பு அபிவிருத்தி துறை (IDS)
2. மனித வள அபிவிருத்தி துறை (HRD)
3. இயற்கை வள முகாமைத்துவத் துறை (NRM)
4. பாதுகாப்புத் துறை (DEF), மற்றும்
5. அரச நிருவாகத் துறை (GOV)

வரைபடம் 8.1 (இ) வருடாந்த நிதி வரையறைகள் மற்றும் விடுவிப்புகள் - 2012



அட்டவணை 8.1 (இ)

	IDS	HRD	NRM	DEF	GOV
வரையறை	112,473	140,540	153,268	258,622	340,131
விடுவிப்புகள்	78,409	127,312	114,460	249,725	298,302
விடுவிப்புகளின் சதவீதம்	70%	91%	75%	97%	88%

வரைபடம் 8.1 (இ) யில் காட்டப்பட்டுள்ளவாறு, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் ஒவ்வொரு துறைக்காகவும் அதன் தேவைப்பாடுகளை எதிர்க் கொள்வதற்கு நிதியை விடுவித்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் திறைசேரியானது, பாதுகாப்பு மனித வள அபிவிருத்தி, மற்றும் அரசாங்கத் துறை ஆகியவற்றுக்கான வரையறைகளில் 88% இற்கும் மேலதிகமான தொகையொன்றை விடுவித்துள்ளது. இயற்கை வள முகாமைத்துவத் துறை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை ஆகியவற்றுக்கும் முறையே 75% மற்றும் 70% தொகை வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 8.1 (ஈ) மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் மற்றும் கட்டுநிதி வரையறைகள் என்பவற்றின் துறைசார் விடுவிப்புகள்

(ரூபா மில்லியன்)

துறைகள்	மீண்டுவரும் செலவினம்			மூலதனச் செலவினம்		
	வரையறை	விடுவிப்புகள்	%	வரையறை	விடுவிப்புகள்	%
IDS	23,979	17,291	72	87,074	60,864	70
HRD	109,468	108,302	99	28,927	18,045	62
RES	73,119	67,824	93	78,770	46,199	59
DEF	223,658	224,558	100	29,324	21,775	74
GOV	250,714	241,246	96	87,710	56,616	65
மொத்தம்	**680,939**	**659,221**	97	**311,805**	**203,500**	65

அட்டவணை 8.1 (ஈ) இல் காட்டப்பட்டுள்ளவாறு, மீண்டெழும் செலவினத்திற்காக செலவு செய்யும் நிறுவனங்களின் நிதித் தேவைப்பாடுகளைப் பெரும்பாலும் பூர்த்தி செய்துள்ளது. வேறு வகையில் கூறுவதானால் அது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வருடத்திற்காகத் தீர்மானிக்கப்பட்ட மொத்த நிதி வரையறையில் சுமார் 97% சதவீதமாக இருந்தது. மனிதவள அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் அரசாங்கத் துறை ஆகியவற்றுக்காக மீண்டெழும் செலவினத்திற்கான நிதி விடுவிப்பு 96% இற்கும் கூடுதலாக இருந்தது.

மூலதனச் செலவுகள் என்ற வகையில், திறைசேரியானது, கடந்த வருடத்தில் 71% ஒத்திசைவான அளவுடன் ஒப்பிடும் போது, நிதி வரையறையில் 65% வரை விடுவிக்கக் கூடியதாக இருந்தது. 65% சதவீத மூலதனச் செலவினத்திற்கு உரியதாகவிருந்த மொத்த விடுவிப்புகளுக்கு அமைவாக சகல மாவட்டங்களிலும் மூலதனச் செலவின நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அரசாங்கத் துறைக்கு, அதன் வரையறையில் 65% சதவீதத்தை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் விடுவித்துள்ளது. மூதனச் செலவினங்கள் தொடர்பாக அதிகூடிய விடுவிப்பு பாதகாப்புத் துறைக்காக அதன் வரையறைகளில் 74% வீதம் 2012 ஆம் ஆண்டில் விடவிக்கப்பட்டுள்ளது.

8.1.5 கட்டுநிதி வரையறைகள் மற்றும் உண்மையான செலவின விடுவிப்புகள் பற்றிய துறைசார் இசைவு

வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது வளங்களை ஒதுக்குவதில் பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன. பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கரமாக இருக்கின்ற திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், நிதியினை விடுவிக்கும் போது அதே முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கின்றது. வரைபடம் 8.1 (ஊ) இல் காட்டப்படுகின்ற இணைப்பாக்கங்களின் பிரகாரம், சொல்லப்பட்ட முன்னுரிமைகளுக்கு அமைவாக மீண்டெழும் செலவினம், மூலதனச் செலவினம் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் ஆகியவற்றுக்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், நிதியினை விடுவித்துள்ளது.

அட்டவணை 8.1 (ஈ) நிதி வரையறைகள் மற்றும் விடுவிப்புகளின் துறைசார் இணைப்பாக்கம் - 2012













8.2 அரச கடன் முகாமைத்துவம்

8.2.1 அரச கடன் முகாமைத்துவ உபாயம்

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டமானது, மொத்தத் தேசிய உற்பத்தியில் 5 சதவீதம் வரை வரவு செலவுப் பற்றாக்குறையைக் குறைத்து, அதன் பின்னர் அதற்குச் சமனான ஒரு மட்டத்தில் பேணப்பட வேண்டும் என்றும், பிரதானமாக, நாடுகளின் நடுத்தர தவணைக் கடன் முகாமைத்துவ உபாயத்தில் வழங்கப்படுகின்ற வழிகாட்டலின் கீழ், மொத்தத் தேசிய உற்பத்திக்கான கடன் வீதத்தை 2013 இல் 80 சதவீதமாகவும், 2020 இல் 60 சதவீதமாகவும் குறைக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கோருகின்றது.

இந்த வரைசட்டத்துடன் ஒத்திசைந்து, அரசாங்கத்தின் கடன் முகாமைத்துவ உபாயமானது அரசாங்கத்தின் கடன்பெறும் உபாயத்திற்கு வழிகாட்டக் கூடிய அடிப்படைக் கோட்பாடு என்ற வகையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு மட்டத்தில் அரசாங்க முதலீட்டை உறுதி செய்தல், முடியுமான வரையில் குறைந்த செலவில் கடனைப் பெறுதல், மற்றும் தற்போது இருக்கும் கடனில் சேவைக்கு நிதியளிப்புச் செய்யும் போதியளவான சாத்தியத் தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்ற அதேவேளையில் மீண்டெழும் செலவினத்தை நியாயப்படி விளக்கம் செய்வதில் கவனம் செலுத்துகின்றது.

வரைபடம் 8.2(அ) அரசாங்கக் கடனின் இணைப்பாக்கம்



அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் வள இடைவெளிக்கு நிதியளிப்புச் செய்வதற்கு வேண்டப்படும் கடன் பெறுகையுடன் பல வருடங்களுக்கு மேலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பின் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் ஒரு சதவீதம் என்றவகையில் அரசாங்கத்தின் மொத்தக் கடன் நிலுவை அண்மைக் காலங்களில் குறைவடையும் போக்கிலிருந்து சிறிதளவு மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. இது பாரிய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கத்தின் பெறுபேறாக கடன் கையிருப்பில் அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது.

அரசாங்கத்தின் கடன் முகாமைத்துவ உபாயமானது அரசாங்கத்தின் கடன் முதலீட்டுடனான அபாயத்தைக் குறைக்கும் அதேவேளையில், அரசாங்கத்தின் பாதுகாப்புச் சந்தையை

மேம்படுத்துவதின் மீதான கவனத்தைச் செலுத்தி, அதன் மூலம் 2012 ஆம் ஆண்டில் வள இடைவெளிக்கு நிதியளிப்புச் செய்வதற்கு நீண்ட கால முதிர்வுகளுடன் விற்பனை செய்யக் கூடிய கடன் சாதனங்கள் மீது பாரிய நம்பிக்கை வைத்துள்ளது. அதன் காரணமாக கடன்பெறுகைகளின் கட்டமைப்பானது, வதிவில்லாதவர்கள் ரூபாவில் அதிகாரம் செலுத்தும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு வருவதுடன் உள்நாட்டுக் கடன் பெறுகைகள் மேலும் சந்தைப்படுத்தக் கூடிய கடன் சாதனங்களின் பக்கம் நகர்ந்து மாற்றமடைந்துள்ளது.

8.2.2 அரசாங்கத்தின் கடன்பெறும் நிகழ்ச்சித் திட்டம் – 2012

அரசாங்க வள இடைவெளிக்கு நிதியிடுவதற்காக கடன் பெறுவதானது, வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கேற்ப 2011 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ், 2012 ஆம் ஆண்டுக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வள இடைவெளிக்கு நிதியிடுவதற்கான மொத்தக் கடன் பெறும் எல்லை ரூபா 1,139 பில்லியனுக்குக் கணக்குக் கூறியது.

2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 489 பில்லியன் வரவு செலவுப் பற்றாக்குறைக்கு உள்நாட்டு வளங்களிலிருந்து பெற்ற 308 பில்லியன் மொத்தத் தேறிய கடன்பெறுகையிலிருந்து நிதியளிப்புச் செய்யப்பட்டது. இது மொத்த வரவு செலவுப் பற்றாக்குறையின் 63 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. எஞ்சிய 37 சதவீதம் ஐந்தாவது சர்வதேச இறைமை முறி மற்றும் செயற்திட்டக் கடன்கள் உட்பட வெளிநாட்டு வளங்களினூடாக நிதியளிப்புச் செய்யப்பட்டது.

8.2.3 உள்நாட்டுக் கடன் நிதியளிப்பு

விற்பனை செய்யக்கூடிய கடன் சாதனங்கள் மற்றும் அரசாங்க பாதுகாப்புச் சந்தையை மேம்படுத்தல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் உபாயத்திற்கு அமைவாக, உள்நாட்டுக் கடன் நிதியளிப்பானது பிரதானமாகச் சந்தைப்படுத்தக் கூடிய கடன் சாதனங்களை மையமாகக் கொண்டுள்ளது. சந்தைப்படுத்தக் கூடிய மொத்தக் கடன் பெறுகையில் ரூபா 254.2 பில்லியன் 2012 ஆம் ஆண்டில் ரூபா 99.6 பில்லியனுக்குக் கணக்குக் கூறிய திறைசேரி முறிகளில் வதிவில்லாதவர்கள் மூலமான தேறிய முதலீடுகள் உட்பட 2012 இல் திறைசேரி முறிகளினுடாகப் பெறப்பட்டன. இது மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியளிப்பில் 83 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது.

வரைபடம் 8.2 (ஆ) தேறிய உள்நாட்டு நிதியளிப்பில் உள்ள போக்குகள்



திறைசேரி உண்டியல்களிலிருந்து பெற்ற தேறிய கடன்கள், வதிவில்லாத முதலீடுகள் ரூபா 6 பில்லியன் உட்பட ரூபா 22.8 பில்லியன்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது 2012 இல் மொத்த சந்தைப்படுத்தக் கூடிய கடன்களில் 7.8 சதவீதத்திற்கு கணக்குக் கூறிய அதேவேளையில், தேறிய உள்நாட்டு நிதியளிப்பில் 7.4 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. இலங்கை அபிவிருத்தி வங்கியினூடாகப் பெற்ற தேறிய கடன்கள் மொத்த தேறிய உள்நாட்டு நிதியளிப்பில் 6 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2011 இல் பெறப்பட்ட ரூபா 5.3 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 18.4 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

தேறிய உள்நாட்டு நிதியளிப்பின் குறுகிய காலக் கடன்களின் பங்கு 2011 இல் காணப்பட்ட 37.4 சதவீதத்திலிருந்து 2012 இல் காணப்பட்ட 37.4 சதவீதத்திலிருந்து 2012 இல் 12.7 சதவீதம் வரை குறைவடைந்துள்ள அதேவேளையில், தேறிய உள்நாட்டு நிதியளிப்பில் காணப்பட்ட ரூபா 269 பில்லியன் நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரையான கடன்களின் பங்கு 2011 இல் காணப்பட்ட 62.6 சதவீதத்திலிருந்து 2012 இல் 87.3 சதவீதம் வரை ஓர் அதிகரிப்பை பிரதிபலித்துக் காட்டியது.

8.2.3.1 உள்நாட்டுக் கடன் நிலுவை

2012 ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநாட்டவருக்கு வழங்கப்பட்ட ரூபா வகுப்பினப்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தவிர மொத்த உள்நாட்டுக் கடன் கையிருப்பு ரூபா 3232.8 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 2011 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 2,804 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 428.7 பில்லியன் அல்லது 15.3 சதவீத அதிகரிப்பு ஒன்றைப் பிரதிபலிக்கின்றது. மொத்தக் கடன் தொகையின் உள்நாட்டுக் கடன் விகிதாசாரம் முன்னைய வருடத்திலிருந்த 54,6 சதவீதத்திருந்து 2012 இல் 53.9 சதவீதம் வரையில் குறைந்த அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியின் ஒரு சதவீதம் என்ற வகையில், மொத்த உள்நாட்டுக் கடன் கூட, 2011 இல் காணப்பட்ட 42.9 சதவீதத்திருந்து 42.6 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மொத்த உள்நாட்டுக் கடனில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பன முறையே மொத்தம் 64.8 சதவீதம் 19.4 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது. எஞ்சியவை இலங்கை அபிவிருத்திச் சபை (6.9 சதவீதம்), மத்திய வங்கியிடமிருந்து பெற்ற ஏற்பாட்டு ரீதியான முற்பணங்கள் (3.4 சதவீதம்), ரூபாய் கடன்கள் (1.9 சதவீதம்), மற்றும் ஏனையவை (3.6 சதவீதம்) ஆகியவற்றுக்காகக் கணக்குக் கூறியது.

2012 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டுக் கடனில் நடுத்தர மற்றும் நீண்ட காலக் கடன் 74.8 சதவீதம் வரை கணக்குக் கூறியது. இது பிரதானமாக குறுகிய காலக் கடனின் பொதுவான அதிகரிப்பின் காரணமாக 2011 இல் காணப்பட்ட 75.1 சதவீதத்துடன் ஒப்பிடும்போது ஒரு சிறிய குறைவைப் பிரதிபலிக்கின்றது. ரூபா 2095 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் மொத்த நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரையான உள்நாட்டுக் கடனின் 86.6 சதவீதத்திற்குக் கணக்குக் கூறியது.

மொத்த உள்நாட்டுக் கடனில், ஒரு வருடத்திற்குள் (2013) முதிர்ச்சிகள் ரூபா 1,415 பில்லியன் வரை கணக்குக் கூறியது. அது 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டுக் கடன் கையிருப்பின் 43.8 சதவீதமாகும். உள்நாட்டுக் கடனின் முதிர்ச்சியின் சராசரிக் காலம் (ATM) நீண்டகால முதிர்ச்சிகளுடன் சந்தைப்படுத்தக்கூடிய கடன் சாதனங்களின் மீது பற்றுவைத்தலின் காரணமாக முன்னைய வருடத்தில் 2.35 வருடங்களிலிருந்து 3.25 வருடங்கள் வரை அதிகரித்தது.

அட்டவணை 8.2 (அ)

அட்டவணை 8.2 (அ) 2012 இன் இறுதியில் உள்ளவாறுஉள்நாட்டுக் கடனின் முதிர்வுக் கட்டமைப்பு (ரூபாமில்லியன்)

முதிர்வு வருடம்	திறைசேரி உண்டியல்	திறைசேரி முறிகள்	ரூபாய்க் கடன்கள்	எஸ்எல்டீபீ	ஓபீயூ	ஏனையவை (தேறிய வைப்புக்கள்)	மொத்தம்	மொத்தத்தின் சதவீதம் ஒன்றாக முதிர்வு
2013	629,070	460,207	2,868	95,380	19,870	207,439	1,414,834	42.7
2014		323,405		40,818			364,223	11.0
2015		314,013	31,430	75,097			420,540	12.7
2016		204,069		11,699			215,768	6.5
2017		184,756					184,756	5.6
2018		203,834					203,834	6.2
2019		108,944					108,944	3.3
2020		80,899					80,899	2.4
2023		74,463	24,083				98,551	3.0
2026		60,365					60,365	1.8
2027		58,712					58,712	1.8
2028		99,031					99,031	3.0
	629,070	2,172,698	58,386	222,994	19,870	207,439	3,310,457	100.0

மூலம் : திறைசேரிசெயற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கைமத்தியவங்கி

சீபீசீயின் சார்பில் வங்கிமேலதிகப் பற்றுமற்றும் முறிதவிர

நிதியங்களை உயர்த்துவதற்கு விற்பனை செய்யக் கூடிய கடன் சாதானங்கள் மீது கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் உபாயத்துடன் இணங்கியதாக, 2011 இல் ரூபா 2,947 பில்லியன் வரை காணப்பட்ட விற்பனை செய்யக்கூடிய கடன் கையிருப்பு 2012 இல் 11.81 சதவீத்தால் அதிகரித்தது. திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் SLDB என்பன விற்பனை செய்ய முடியாத கடன் சாதானங்களை அமைக்கும் ரூபாய்க் கடன்கள் மற்றும் ஏனைய குறுகியகால வங்கிக் கடன் பெறுகைகளுடன் விற்பனை செய்யக்கூடிய கடன் சாதனங்களின் முதலீட்டுத் தொகுதியை அமைக்கின்றது.

அதேபோன்று 2012 ஆம் ஆண்டின் இறுதியில், மொத்த உள்நாட்டுக் கடனில், விற்பனை செய்யக்கூடிய சாதனங்கள் அநேகமாக 91.2 சதவீதத்திற்குக் கணக்குக் கூறிய அதேவேளையில், விற்பனை செய்ய முடியாத கடன் சாதனங்கள் 8.8 சதவீதத்திற்கு (ரூபா 285.7 பில்லியன்) கணக்குக் கூறியது.

8.2.3.2 உள்நாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகள்

அட்டவணை 8.1. (ஆ)

அட்டவணை 8.1 (ஆ) உள்நாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவு (ரூபா மில்லியன்)			
வருடம்	ஆரம்பக் கொடுப்பனவுகள்	வட்டிக் கொடுப்பனவகள்	மொத்தம்
2002	130,786	105,897	236,683
2003	185,083	113,540	298,623
2004	147,740	105,878	253,618
2005	203,347	113,164	316,511
2006	247,536	133,787	381,323
2007	252,165	161,370	413,535
2008	258,720	182,198	440,918
2009	401,296	273,977	675,273
2010	389,672	297,127	686,799
2011	439,894	288,134	728,028
2012	415,441	317,659	733,100

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

2012 இல் உள்ள மொத்த உள்நாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகள், 2011 இலும் பார்க்க 6% சதவீதமான ஒரு சிறிய அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. ரூபா 733.1 பில்லியனுக்குக் கணக்குக் கூறிய மொத்த உள்நாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவில், ரூபா 415.4 பில்லியன் அல்லது 56.2 சதவீதம் உள்நாட்டுக் கடன் மீள் கொடுப்பனவாக இருந்த அதேவேளையில், எஞ்சிய ரூபா. 317.7 பில்லியன் (43.8 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவுகளாக இருந்தது.

மொத்தக் கடன் கொடுப்பனவின் ஒரு சதவீதம் என்ற வகையில், கடன் மீள் கொடுப்பனவு, அதேபோன்று வட்டிக் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டிலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டும் மொத்தக் கடன் கொடுப்பனவு விகிதாசாரத்திற்கான மொத்த உள்நாட்டு கடன் சேவைக் கொடுப்பனவுகள், 2011 இல் காணப்பட்ட 11.1 சதவீதத்திலிருந்து 2012 இல் 9.7 சதவீதம் வரை குறைவடைந்தது. வருடக் காலப் பகுதியில், உள்நாட்டுக் கடன் மீள் கொடுப்பனவுகள் முன்னைய வருடத்தில் இருந்த 6.7 சதவீதத்திலிருந்து மொத்தக் கடன் கொடுப்பனவின் 5.5 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளையில், வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய வருடத்தில் இருந்த 4.4 சதவீதத்திலிருந்து மொத்தக் கடன் மீள் கொடுப்பனவின் 4.2 சதவீதம் வரை குறைந்தளவில் அதிகரித்தது.

8.3 வெளிநாட்டு உதவி முகாமைத்துவம்

மீள் நிரப்பக்கூடிய வெளிநாட்டு உதவி முறையின் கீழ், செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கான கட்டுப்பணத்தை விடுவிப்பது, செயற் திட்டத்திற்கு நேரடியாகவோ அல்லது தொடர்புடைய அமைச்சினூடாக செயற்திட்டத்திற்கு நேரடியாக நிதிகளை விடுவிப்பதன் மூலமாகவோ மேற்கொள்ளப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் மீள்நிரப்பக்கூடிய மீள்நிரப்பல் முறையின் கீழ் செயற்திட்டங்களுக்கு ரூபா 4292 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. 2012 இல் ரூபா 13,011 மில்லியன் தொகைக்குக் கணக்குக் கூறிய வெளிநாட்டு உதவி மானியங்கள், கிடைக்கப்பெற்ற ரூபா 3099 மில்லியன் பெறுமதியான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு மேலதிகமாக பணமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

மத்திய வங்கியானது, பல்வேறு செயற்திட்டங்களுக்காக நன்கொடை முகவர்களிடமிருந்து கிடைத்த நிதியங்களை ஆலோசனை நோக்கங்களுக்காக கட்டு நிதிக் கணக்கில் பேணுகின்றது. 2012 சனவரி முதல் டிசம்பர் வரையில் திறைசேரித் செயற்பாடுகள் திணைக்களம், 2012 டிசம்பர் இறுதியில் தொழிற்பாட்டிலுள்ள மொத்தக் கணக்குகளை 121 கணக்குகள் வரை உயர்த்தி அத்தகைய புதிய கணக்குகளைத் திறப்பதற்கு வசதியளித்துள்ளது. வருட காலப் பகுதியில் ரூபா 41,135 மில்லியனுக்குக் கணக்குக் கூறக்கூடிய நிதியங்கள் நன்கொடை முகவர்களிடமிருந்து இந்தக் கணக்குகளுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

8.4. அரசாங்க வருமானம்

8.4.1 வருமானம் சேகரிப்பு

திறைசேரித் தொழிற்பாட்டின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் 11 வரியல்லாத வருமானத் தலைப்புகளுக்கும் 01 வரி வருமானத் தலைப்புக்கும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றனர்.

மீளாய்வின் கீழிறிருந்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் ரூபா 158.7 பில்லியன் மதிப்பிடப்பட்ட மொத்த வரியல்லாத வருமானத்தில், ரூபா 47.7 பில்லியன் தொகை அல்லது 30% மேற்குறிப்பிட்ட வரியல்லாத வருமானத் தலைப்புகளிலிருந்து சம்பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட அதேவேளையில், ரூபா 22.9 பில்லியன் தொகை வரி வருமானத் தலைப்புகளிலிருந்து சம்பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. மீளாய்வின் கீழிருந்த வருடக் காலப்பகுதியில் திணைக்களமானது, வரி அல்லாத வருமானமாக ரூபா 41 பில்லியன் தொகையொன்றையும் வரி வருமானமாக ரூபா 22.3 பில்லியன் தொகையொன்றையும் சம்பாதிக்கக் கூடியதாக இருந்தது. 2011 - 2012 ஆம் வருடங்கள் குறித்த மேற்குறிப்பிட்ட 12 வருமானத் தலைப்புகளினதும் விபரங்கள் அட்டவணை I இல் காட்டப்படுகின்றன.

அட்டவணை 8.4. (அ) : 2011 - 2012 வரி மற்றும் வரி அல்லாத இறைவரி சேகரிப்பு

வருமான விபரம்	வருமானச் சேகரிப்புகள்		ரூபா : 000	
	2011		2012	
	மதிப்பீடு	சேகரிப்பு	மதிப்பீடு	சேகரிப்பு
வரி அல்லாத வருமானம்				
அரசாங்கக் கட்டடங்கள் மீதான வாடகை	690,000	663,387	650,000	582,264
ஏனைய வாடகை	60,000	662,160	62,000	50,139
கடன் மீதான வட்டி வருமானம்	6,775,000	7,293,475	7,704,000	8,100,516
ஏனைய வட்டி வருமானம்	1,300,000	2,553,028	1,325,000	1,387,711
திணைக்கள விற்பனைகள்	100,000	137,491	130,000	143,436
சில்லறைப் பொருட்கள்	5,500,000	6,502,094	7,114,582	2,941,497
தண்டப்பணம் பற்றும் அரசுடமையாக்கல்	2,800,000	6,264,217	3,000,000	5,137,117
ஏனைய பற்றுச் சீட்டுகள்	8,500,000	12,711,008	9,042,000	3,238,911
ஏனைய நடைமுறை மாற்றங்கள்	1,485,000	1,953,084	1,800,000	2,222,737
மூலதனச் சொத்தக்களின் விற்பனை	500,000	514,298	500,000	831,152
துணைக் கடன்களை மீள அறவிடல்	14,772,000	14,877,713	16,470,000	16,409,105
உப மொத்தம்	**42,482,000**	**54,131,955**	**47,797,582**	**41,044,585**
வரி வருமானம்				
தொலைபேசி பாவனையாளர் கட்டணம்	20,500,000	18,650,864	22,900,000	22,289,141
உப மொத்தம்	20,500,000	18,650,864	22,900,000	22,289,141
மொத்த வருமானம்	**62,982,000**	**72,782,819**	**70,697,582**	**63,333,726**

மேலும் திறைசேரிச் செயற்பாட்டின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் வெளிநாட்டு உதவி மானியங்களுக்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார். வெளிநாட்டு உதவி மானியங்களின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 20 பில்லியன்களாக இருந்தபோதிலும், மீளாய்வின் கீழிருந்த காலப் பகுதியில் கிடைக்கப்பெற்ற மொத்த மானியம் ரூபா 16 பில்லியன்களாக இருந்தது.

அட்டவணை 8.4. (ஆ) : வெளிநாட்டு மாணியங்களின் சேகரிப்பு

வருமான விபரம்	வருமானச் சேகரிப்புகள்		ரூபா : 000	
	2011		2012	
	மதிப்பீடு	சேகரிப்பு	மதிப்பீடு	சேகரிப்பு
வெளிநாட்டு மாணியங்கள்	13,750,000	15,961,635	20,000,000	16,070,772
மொத்தம்	13,750,000	15,961,635	20,000,000	16,070,772

2012 ஆம் ஆண்டின் வரி அல்லாத ஆக்கக் கூறுகளின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு எதிராக 86% அடைவு பதிவுசெய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஏனைய கிடைப்பனவுகள் மற்றும் ஏனைய வருடங்களின் சராசரி வருமானம் ஒன்றைப் பதிவுசெய்யும் அதேவேளையில், சில வருடங்களின் உயர் வருமானங்களைப் பெறும் இயற்கையான குணப்பண்புகளைக் கொண்டுள்ள பல்வேறு வருமானங்கள் போன்ற சில வருமான மூலங்களின் பெறுபேறாக 2011 ஆம் ஆண்டின் வரி அல்லாத வருமானச் சேகரிப்புக்கு எதிராக குறிப்பிடத்தக்க அளவில் 24% வீழ்ச்சி ஒன்றைக் காட்டுகின்றது.

அதே நேரத்தில், 2011 ஆம் ஆண்டின் சேகரிப்பான ரூபா 18.65 பில்லியன் தொகைக்கு எதிராக 2012 இல் 19.52% உதவி அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ள அதேவேளையில் தொலைபேசி சந்தா அறவீட்டின் கீழ் ரூபா 22.9 பில்லியன் இலக்குக்கு எதிராக 98% செயலாற்றுகை அடையப்பெற்றுள்ளது. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு மானியங்களின் கீழான வருமானச் சேகரிப்பின் செயலாற்றுகை மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 20 பில்லியனுக்கு எதிராக 88% ஆக இருந்த அதேவேளையில், அந்தச் சேகரிப்பானது 2011 ஆம் ஆண்டுக்குச் சமனாக ரூபா 16 பில்லியன் அளவில் இருந்தது. ஐரோப்பியச் சமுதாயங்கள் சில சிரமங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டு இருந்ததன் பெறுபேறாக அந்த நாடுகளிலிருந்து மானியங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

8.4.2 துணைக் கடன் மூலதனம் மற்றும் வட்டி என்பவற்றை அறிவிடல்

திணைக்களமானது மாதாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்ற துணைக் கடன்கள் தொடர்பான தகவல் முறையைப் பேணி வருகின்றது. பன்னிரண்டு வரி அல்லாத வருமானத் தலைப்புகளில் துணைக் கடன்களின் மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டையும் அறவிடுவதற்காக திறைசேரி செயற்பாடுகளின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் பொறுப்பாக இருக்கின்றார். மேற்குறிப்பிட்ட இரண்டு வருமானத் தலைப்புகளின் கீழ் வருமானத்தை மதிப்பீடு செய்தல், ஒன்று திரட்டுதல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல் என்பன இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில், துணைக் கடன்களாக ரூபா 37.8 பில்லியன் விடுவிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ரூபா 16.4 பில்லியன் கடன் மூலதனமாக மீள அறவிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட துணைக் கடன்கள் மீதான வட்டியாக ரூபா 8.1 பில்லியன் அறவிடப்பட்டுள்ளது.

கடன் அறவிடல் செயற்பாட்டின் கண்காணிப்பை பலப்படுத்தியதன் காரணமாக, இந்த வருடத்திற்காக கடன் மற்றும் உரிய வட்டியை அறவிடல் தொடர்பாக வைக்கப்பட்ட இலச்சினை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அடைய முடிந்துள்ளது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில், வணிக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உட்பட 83 பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட துணைக் கடன்களின் நிலுவைகள் ரூபா 323 பில்லியன்களாக இருந்தன.

8.4.3 பிணைகள் மற்றும் நிவாரணக் கடிதங்கள் தொடர்பான நிச்சயமற்ற பொறுப்புக்கள்

8.4.3.1 திறைசேரிப் பிணைகள்

அரச தொழில் முயற்சிகள் தமது முகாமைத்துவம் மற்றும் வர்த்தகத் தேவைகளுக்காக உள்நாட்டிலிருந்து அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதி உதவிகளை வேண்டும் போது அதற்குத் தேவையான திறைசேரிப் பிணைகளை வேண்டுகின்றன. 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தினால் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அதற்குத் தேவையான பிணைகளை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் வழங்குகின்றது.

2012 ஆம் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள திறைசேரிப் பிணைகளின் மொத்தப் பெறுமதி முன்னைய வருடத்தின் தொகையான ரூபா 198.136 மில்லியனுடன் ஒப்பிடும் போது 34.3% அதிகரிப்புடன் ரூபா 266.074 மில்லியன்களாக இருந்தது. இதுவரையில் வழங்கப்பட்டுள்ள மொத்தப் பிணைகளில் சுமார் 71% சதவீதமான பிணைகள் மின்சாரம் மற்றும் சக்திவலுத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. திறைசேரிப் பிணைகளின் துறைசார் இணைப்பு அட்டவணை 2 மற்றும் வரைபடம் 1 என்பவற்றில் காட்டப்படுகின்றது.

அட்டவணை 8.4.(இ) : திறைசேரிப் பிணைகளின் துறைசார் இணைப்பாக்கம் 2011 மற்றும் 2012

துறை	பெறுமதி ரூபா மில்லியனில்		சதவீதம் %	
	2011	2012	2011	2012
விமானப் போக்கவரத்து	1,804	22,544	1	8
வங்கி	5,000	5,000	2	2
வீதி அபிவிருத்தி	18,880	27,442	9	10
வீடமைப்பு	2,855	20,405	2	8
மின்சாரம் மற்றும் வலுச்சக்தி	168,207	189,294	85	71
வியாபாரம் மற்றும் வணிகம்	1,389	1,389	1	1
	198,135	266,074	100	100

வரைபடம் 8.4.(அ) : திறைசேரிப் பிணைகளின் துறைசார் இணைப்பாக்கம் 2012



அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பொருட்டு கடன் கடிதங்களைத் திறப்பதற்கு வசதியளிப்பதற்காக நிவாரணக் கடிதங்கள் இந்தத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்ட அத்தகைய நிவாரணக் கடிதங்களின் மொத்தப் பெறுமதி, முன்னைய வருடத்தின் தொகையான ரூபா 27,661 மில்லியனுடன் ஒப்பிடும் பொது ரூபா 82 மில்லியன் அதிகரிப்பு ஒன்றைப் பதிவு செய்து ரூபா 27,745 மில்லியனாக இருந்தது. பிணைக் கடிதங்களின் துறைசார் இணைப்பு அட்டவணை 3 மற்றும் வரைபடம் 2 என்பவற்றில் காட்டப்படுகின்றன.

அட்டவணை 8.4.(ஈ) : நிவாரணக் கடிதங்கள்

துறை	பெறுமதி ரூபா மில்லியனில்		சதவீதம் %	
	2011	2012	2011	2012
பாதுகாப்பு	7,704	12,627	28	45
விவசாயம்	13,952	872	49	3
கல்வி	1,006	3	4	1
உட்கட்டமைப்பு	1,546	10,072	6	36
ஏனையவை	3,453	4,169	13	15
மொத்தம்	27,661	27,743	100	100

வரைபடம் 8.4.(ஆ): நிவாரணக் கடிதங்களின் துறைசார் இணைப்பாக்கம் 2012



8.4.4 சொத்துக் கடன் பிணை நிதியம்

அரசாங்கமானது, அரசாங்க உத்தியோகத்தர்கள் யாவரும் பெறுமதியான சொத்துக்களை அடைந்து கொள்வதற்கு வாய்ப்பினைக் கொண்டிருக்கிறார் என்பதை உறுதிசெய்யும் நோக்கத்துடன் 2005 ஆம் ஆண்டில் வரவு செலவு முன்மொழிவு ஒன்றாக வங்கித் துறையினூடாக வீட்டுக் கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தினூடாக கடன்களைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மரணித்தல், முழுமையாக அங்கவீனமடைதல், அல்லது யாதேனும் ஒரு மருத்துவ ரீதியான காரணிகளின் காரணமாக ஒய்வு பெறுதல் (தகைமை பெறும் வகுதி) போன்ற நிகழ்வின் போது பொதுத் திறைசேரியினால் கடன்கள் திருப்பிச் செலுத்தப் படுவதனை உறுதிப்படுத்துவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ் பிணை நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, மேற்குறிப்பிட்ட பிணை நிதியமானது திறைசேரி முறிகளில் ரூபா 916 மில்லியன் ஆரம்ப முதலீட்டுடன் 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டுள்ளது.

2003.04.26 ஆம் திகதிய 122 ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம், இந்த நிதியத்தை நடைமுறைப்படுத்துதல், நிதியத்திலிருந்து முதலீடு செய்தல், முதலீட்டின் மூலமான சம்பாத்தியங்களைச் சேகரித்தல் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் சார்பில் கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற பணிகள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2010 - 2012 ஆம் வருடக் காலப் பகுதியில் இந்த நிதியத்தின் கீழ் கடன் நிலுவைகளை மீளச் செலுத்துதல் அட்டவணை 8.5 (உ) இல் காட்டப்படுகின்றது.

அட்டவணை 8.4.(ஊ): கடன் நிலுவைகளைச் செலுத்துதல்

வருடம்	2010	2011	2012
உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை	39	46	63
செலுத்தப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா)	29,098,098	31,605,785	47,144,445

மேற்குறிப்பிட்ட வகுதியின் கீழ் தகைமை பெறும் 238 அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக நிதியின் ஆரம்பத்திகலிருந்து இந்தத் திட்டத்தின் கீழ் மீளச் செலுத்தப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபா 165,564,967 ஆக இருந்த அதேவேளையில், 2012 ஆம் ஆண்டின் இறுதியில் கடன் பிணை நிதியத்தில் இருந்த நிலுவை ரூபா 1,326,328,081 ஆகும்.

2012 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்த நிதியத்தின் தொழிற்பாடு சுருக்கப்பட்ட வடிவில் அட்டவணை 5 இல் காட்டப்படுகின்றது.

அட்டவணை 8.4. (ஊ) : சொத்துக் கடன் பிணை நிதியத்தின் தொழிற்பாடு - 2012

			ரூபா
2012.01.01 இல் உள்ளவாறான மீதி			
	திறைசேரி முறிகள்	916,231,000	**1,291,222,276**
	பொது வைப்பு	374,991,276	
<u>**சேர்த்தல் : வருமானம்**</u>			
வட்டி வருமானம்			82,250,250
			1,373,472,526
<u>**கழித்தல் : கொடுப்பனவுகள்**</u>			
கடன் நிலுவைகளைச் செலுத்துதல்			(47,144,445)
2012.12.31 இல் உள்ளவாறான மீதி			
	திறைசேரி முறிகள்	916,231,000	
	பொது வைப்பு	410,097,081	**1,326,328,081**

இதுவரையில் மீளச் செலுத்தப்பட்ட கடன் நிலுவைகள் இந்த நிதியத்தின் ஆரம்ப முதலீடான 916 மில்லியனுக்கு எதுவித தாக்கமும் ஏற்படாதவாறு அதன் வட்டி வருமானத்திலிருந்து ஈடுசெய்யக் கூடியதாக இருந்துள்ளது என்பதை மேலே உள்ள அட்டவணை மேலும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

8.5 திறைசேரியின் பேரக் கணக்கு முறையை மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை தொடர்பான முன்னேற்றம்.

தெற்காசியப் பிராந்தியத்தில் நிதி முகாமைத்துவத்தில் ஒரு முன்னோடி நிறுவனமாக மாறிவரும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2012 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் பின்வரும் இலக்குகளை அடைந்துள்ளது.

01 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் தவிர ரூபா 4,365.1 பில்லியன் மொத்தக் கிடைப்பனவுகளையும், ரூபா 454.8 பில்லியன் மொத்தக் கொடுப்பனவுகளையும் பதிவுசெய்யக் கூடியதாக இருந்துள்ளது. இந்த சகல கிடைப்பனவுகளும் கொடுப்பனவுகளும் முறையே 8,876 பணம் செலுத்தும் வவுச்சர்களினதும் 15,926 கொடுப்பனவு வவுச்சர்களினதும் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையில் நிதிக் கொடுக்கல் வாங்கல் நடைமுறைகளிலுள்ள வினைத்திறன், வசதி மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு இந்த 15,926 கொடுப்பனவு வவுச்சர்களும் 15,556 கொடுக்கல் வாங்கல்களினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 14,109 கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் வழியாக இலத்திரனியல், நிதிப் பரிமாற்ற முறைமையினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது கொடுக்கல் வாங்கலின் 88.5% ஐப் பிரதிநிதிப்படுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக 370 வங்கிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் மெய்மை நிலை கொடுப்பனவு மற்றும் தீர்த்தல் முறைமையினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுடன் 2012 ஆம் ஆண்டில் கிடைப்பனவுப் பதிவுகளில் பதிவாகியுள்ள 8798 கொடுக்கல் வாங்கல்களில் 35% சதவீதமானவை காசோலைகளின் பயன்பாடு இன்றி நிதிப் பரிமாற்ற முறையினூடாக மேற்கொள்ளப்பட்டவையாகும்.

இலங்கையின் நிதிச் சந்தையில் செல்வாக்குமிக்க ஒரு பங்குதாரராக இருக்கக்கூடிய திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், 2012 ஆம் ஆண்டில் உயர் பெறுமதியைக் கொண்ட காசோலைகளின் சுற்றோட்டத்தைக் குறைப்பதற்கு இயலுமை பெற்றிருந்தது. அதன்மூலம் இலங்கையிலுள்ள நிதிக் கொடுக்கல்களின் வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் பயன்மிக்க தன்மை என்பன உயர்வடைந்தன.

அதேநேரத்தில், அரசாங்கத்தின் மின் - அரசாங்கக் கொள்கைக்கு வசதியளிப்பதற்கு இலத்திரனியல் ஊடகங்களினூடாக செலவிடும் நிறுவனங்களுக்கு மொத்தம் 14109 கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்களை திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் அறிவிக்கக்கூடியதாக இருந்தது. இந்தக் கடிதங்கள் அற்ற கொடுக்கல் வாங்கல்கள் தபால் மூலமான தாமதங்களைக் குறைக்கும் அதேவேளையில் தபால் செலவினத்தையும் குறைப்பதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளன.

02. திறைசேரி பேரக் கணக்கு முறைமையைப் பயன்படுத்தியமையானது பிரதிச் செயலாளரின் வங்கிக் கணக்குகளை வினைத்திறன் மிக்கதாகவும் பயன் மிக்கதாகவும் தொழிற்படுத்துவதனை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தது. அதன் பெறுபேறாக அரசாங்கத்தின் மிகையான வட்டிச் செலவுகள் குறைக்கப்பட்டன.

அதற்கேற்ப அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றினதும் நாளின் இறுதியில் காணப்பட்ட காசு மீதிகள் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் வங்கிக் கணக்கின் மிகையை உயர்த்துவதற்கு பயன்மிக்க முறையில் பயன்படுத்தப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள அரசாங்கத்தின் காசு மீதிகள் எந்த நேரத்திலும் சராசரியாக அண்ணளவாக ரூபா 40 பில்லியன்களாக இருந்தன. அதனால் திறைசேரியின் பேரக் கணக்கு முறையினூடாக பிரதிச் செயலாளரின் கணக்குகளுக்கு இந்த பேரக் காசு நிலுவைகள் மீள எடுக்கப்பட்டதிலிருந்து சுமார் ரூபா 4,227,955,169.99 வட்டிச் செலவினங்கள் சேமிக்கப்பட்டது. திறைசேரி பேரக் கணக்கு முறைமை இடம்பெறாதிருந்தால் மிகையாக எடுத்த நிதியின் மொத்த வட்டிச் செலவுகள் 36.6% இனால் அதிகரித்திருக்கும் பின்வரும் வரைபடம் இந்த நிலையைக் காட்டுகின்றது.

வரைபடம் 8.6 (அ)